| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 14/12/2023 |
| Case No. | : O.S. 38/2019 | Nationality | : Indian |
| Name | :வித்வசிங் | Religion | : |
| Father's/Husband's Name | : முருகையன் | Age | :67 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. தாவா சொத்து 2ம் பிரதிவாதி அக்னீஸ்வரர் கோவிலுக்கு சொந்தமானது என்றால் சரிதான். தாவா சொத்து ஆரம்ப காலத்தில் பார்வதிஅம்மாள் என்பவருக்கு கோவில் நிர்வாகத்தால் புஞ்சை குத்தகை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவர் குத்தகை சாகுபடி செய்து வந்த காலம் வரை கோவிலுக்கு பகுதி செலுத்தி வந்தார் என்றால் சரிதான். பார்வதி அம்மாள் தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனார் முருகையனுக்கு மேல்கூரையை பொறுத்து கிரைய ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு எவ்வாறு தாவா சொத்து கிடைத்தது என்றால் எனது அப்பா மூலமாக எனக்கு கிடைத்தது. எனது அப்பா எனக்கு ஆவணம் எதுவும் எழுதி வைத்துள்ளாரா என்றால் எழுதி வைத்துள்ளார். தாவா சொத்திற்கு நாளது தேதி வரை கோவிலுக்கு யார் பகுதி செலுத்தி வருகிறார் என்றால் நான் தான் செலுத்தி வருகிறேன்.

2. தாவா சொத்திற்கு பக்கத்தில் உள்ள கோவிலுக்கு சொந்தமான சொத்தினை 1ம் பிரதிவாதி ரமேஷ் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தை பொறுத்து எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை என்றால் சரிதான். கோவிலுக்கும் எனக்கும் பிரச்சனை இல்லை என்றால் சரிதான். எதற்காக கோவில் நிர்வாகத்தை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் கோவிலுக்கு இவ்வழக்கு விவரம் தெரிய வேண்டும் என்பதற்காக சேர்த்துள்ளேன். எங்கள் இருவரின்

பிரச்சனையில் கோவில் நிர்வாகத்தை அவசியமில்லாமல் இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளதால் 2ம் பிரதிவாதியை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

/sd/N.Sivapalani/
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.